திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, கண்ணகிக் கோயிலைப்பற்றிக் கூறும்போது அமைச்சரவர்கள் அது தமிழ்நாட்டு எல்லையிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கிறது என்று சொன்னார்கள். கேரள எல்லையிலிருந்து சுமார் 25 மைல் தொலைவிலுள்ள பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பத்மனபபுரம் கொட்டாரத்தை நாம் பிரிந்துவந்தபோது கேரள அரசுக்கு விட்டுக்கொடுத்தோம். அதைப்போலவே இப்போது ஒரு மைல் தொலைவிலுள்ள கண்ணகி கோயிலை நமக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்று நமது அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பத்மனபபுரம் அரண்மனையை ஒப்படைத்தது, கேரளமும் தமிழ்நாடும் பிரியும் போது ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில். மொழிவழி மாநிலமாகப் பிரியும்போது இப்படிப்பட்ட ஒரு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் நாம் அதைக் கேட்கலாம்; அவர்களும் ஒப்புக் கொள்வார்கள். அப்போது இதுபற்றிய தகவல் நமக்குத் தெரியவில்லை. இப்போதுதான் நமக்கு அது தெரிய வந்திருப்பதால் கேரள அரசைக் கேட்டிருக்கிறோம். அவர்களின் பதிலை எதிர் பார்க்கிறோம். பதில் வந்த பிறகு இந்தப் பிரச்சினை குறித்து எப்படி அணுகமுடியுமோ அப்படி அணுகலாம்.

Assistance to Bharatiya Vidya Bhavan

* 631 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government have given any financial assistance to the Bharatiya Vidya Bhavan in Madras; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். பம்பாயிலுள்ள பாரதீய வித்யாபவனம் சென்னையில் அதன் ஒரு கிளையை நிறுவ மைலாப்பூரில் உள்ள ஒரு கட்டடத்தை விலைக்கு வாங்க வசதி செய்யும் பொருட்டு 1963-ல் ரூ. 25,000 மொத்த மானியமாக இம்மாநில அரசால் வழங்கப்பட்டது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, அதன் பணிகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய பணிகள்பற்றிய முழு விவரம் தெரியவில்லை. பாரதீய வித்யாபவனம் அதனுடைய கிளை ஒன்றைச் சென்னையில் அமைக்க 1,60,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டடத்தை வாங்குவதற்கு நம்முடைய அரசு மானியம் வழங்க வேண்டுமென்று 1963-லே கேட்டார்கள். அவர்கள் கோரிக்கையைப் பரிசீலித்து 25,000 ரூபாய் மானியமாக இந்த அரசு கொடுத்தது. ஆனால் அதனுடைய பணி விவரங்களுக்கான தகவல் இல்லை.

கன்னியாகுமரி மாவட்ட நகரப் பஞ்சாயத்துக்களின் வருவாய் தரும் திட்டங்கள்

* 632. வினு—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73-ம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் பஸ் நிலையம், சந்தை அபிவிருத்தி போன்ற வருவாய் தரும் திட்டங்களை (Remunerative Enterprises நிறைவேற்றுவதற்கெனக் கடன் கோரி அரசுக்கு எத்தனை மனுக்கள் அனுப்பியுள்ளன ?

(இ) அந்நகரப் பஞ்சாயத்துக்கள் எவை எவை ?

(உ) அவற்றில் இந்த நிதி ஆண்டில் எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(எ) எவற்றிற்கேனும் கடன் வழங்கப்படாமலுள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ), (உ), (எ) &(ஐ) பிரதிபலன் தரும் திட்டத்தின்கீழ் (Scheme for remunerative enterprises) 1972–73 நிதியாண்டில் அரசு கடனுதவி கோரி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எந்தப் பேரூராட்சியிடமிருந்தும் கடன் விண்ணப்பங்கள் வரவில்லை.

Dam across river Kushastali

* 633 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct a bed-dam across the river 'Kushastali' at Arumbakkam in